Proceedings of Jaffna University International Research Conference (JUICE-2012), pp. 214-218, published: March 2014, Sri Lanka

# இலங்கையில் நிலவி வரும் ஆடல் வடிவங்களில் நாட்டிய சாஸ்திர மரபின் பங்களிப்பு

அ. கிருபைராஜா
நடனத்துறை, கலைப்பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
arulchelvi.k@gmail.com

**ஆய்வுச்சுருக்கம்:** "துயரத்தினாலும் அயர்ச்சியினாலும், சோகத்தினாலும், பற்றப்பட்டுள்ள மனிதனின் உள்ளத்தில் ஏற்படும் சோர்வைப் போக்கி இன்ப கிளர்ச்சியை உண்டு பண்ணி, அமைதியைத் தரவல்லது நாட்டியம்" என்கிறார் பரத முனிவர். இந்நாட்டியக்கலையின் சிறப்பை பற்றிக்கூற எழுந்த நூலே பரதரின் நாட்டிய சாஸ்த்திரமாகும். இந்நூல் கி.மு. இரண்டாம் நுற்றாண்டிற்கும், கி.பி இரண்டாம் நூற்றாண்டிற்கும் இடைப்பட்ட காலத்திலே தொகுக்கப் பட்டிருக்கலாமென சில ஆய்வாளர் கருதுவர். அக்கால எல்லைக்கு முன் அல்லது பின் இது எழுதப்பட்டிருக்கலாமென கொள்வோரும் உள்ளர். இந் நூலில் முற்பட்டகாலச் சூத்திரங்களும், செய்யுட்களும் இடம்பெற்றுள்ளமை தெளிவு. முற்பட்ட காலத்திய பகுதிகள் சிலவும் இதில் இடம்பெற்றிருக்கலாமெனவும் ஒரு சாரார் கருதுவர். இன்று கிடைத்துள்ள காலத்தால் முந்திய நாட்டிய முதனூலாகவும் முழுமையான நூலாகவும் நாட்டிய சாஸ்த்திரம் மிளிர்கின்றது. இந்நூலிலே நாடகம், நடனம், இசை, ரசங்கள், காவிய லக்ஷணங்கள் முதலிய பலவிடயங்கள் பற்றிக் கூறப்படுகின்றன. இந்தியாவில் நிலவிவரும் கலை வடிவங்களாகிய அதாவது, இசை, நடனம், ஓவியம், சிற்பம் எதுவாயினும் அனைத்திற்கும் வழிகாட்டி நூலாக மட்டுமன்றி மூல நூலாகவும் நாட்டியசாஸ்த்திரம் விளங்கி வந்துள்ளது. இதன் தாக்கம் இந்தியாவிற்கு அண்மையிலுள்ள இலங்கையிலும் காணப்பட்டுள்ளது. நாட்டிய சாஸ்திரம் விபரிக்ககும் இதில் நடனக்கலை பற்றிய தகவல்களை மட்டும் கூறும் முகமாக இவ்வாய்வுக்கட்டுரை அமைகிறது. இலங்கையில் கையாளப்பட்டு வரும் ஆடல் வடிவங்களில் நாட்டிய சாஸ்திரத்துடன் தொடர்புடைய அம்சங்களை பின்பற்றி இருக்கிறார்கள் ஆனால், அவை நாட்டிய சாஸ்திரங்களுடன் தொடர்புபட்டிருக்கும் கருத்துக்கள் என்பது அவர்களுக்கு தெரியாமல் கூட இருக்கலாம். தற்போது நாட்டிய சாஸ்திர அறிமுறையை விளக்கமாக தெரிந்து கொள்ளும் போதுதான் இவை நாட்டிய சாஸ்திர விதி முறைகளை பின்பற்றி இருக்கிறார்கள் என்பதனை அறிந்து கொள்ளக்கூடியதாக இருக்கிறது. இவ்வாறான அம்சங்களை இனம்காட்ட வேண்டும் என்பதே இவ்வாய்வுக்கட்டுரையின் நோக்கமாகும். இலங்கையில் கையாளப்பட்டுவரும் ஆடல் வடிவங்களில் நாட்டிய சாஸ்திரமே வழி நூலாக காணப்பட்டிருக்கின்றது என்பதே இவ்வாய்வின் கருதுகோளாக அமைகிறது. நாட்டியக்கலையின் சிறப்புக்களை தொல்காப்பியம், கூத்தநூல் போன்றவை கொண்டிருப்பினும் ஆய்வை எல்லைப் படுத்த வேண்டும் என்பதற்காக நாட்டியக்கலையின் மூலநூலாக விளங்கும் நாட்டிய சாஸ்த்திரம் எனும் நூல் மட்டுமே ஆய்விகாக எடுத்துக் கொள்ளப்படுகிறது. ஆகவே இலங்கையில் நிலவிவரும் ஆடல் வடிவங்களில் நாட்டிய சாஸ்த்திர மரபின் பங்களிப்பு எத்தகையது என்பதும் எவையெல்லாம் நாட்டியசாஸ்த்திர அம்சங்கள் என்பதனை தெரிந்து கொள்ள அனைவருக்கும் இவ்வாய்வு பயனளிக்கும் என எண்ணுகின்றேன்.

**திறவுச்சொற்கள்:** இலங்கையில் ஆடல் வடிவம், நாட்டிய சாஸ்த்திரம்.

## I. அறிமுகம்

இலங்கையில் நிலவிய ஆடல் மரபுகள் பற்றி அறிவதற்கான வரலாற்று மூலங்கள் குறைவாகவே கிடைத்துள்ளன. இக்கலை பற்றிய இலக்கணங்களை கூறும் நூல்கள் இக்காலத்தில் எழுதப்பட்டாதாக தெரியவில்லை. இந்திய சாஸ்திரிய நடனம் பற்றி கூறும் நாட்டிய சாஸ்திரம் அபிநய தர்ப்பணம் போன்ற நூல்களே இங்கும் பொதுவாக பின்பற்றப்பட்டதாகத் தெரிகின்றது. மேலும் இக்கலை மரபுகள் ஆசான்கள் மூலம் வாய் மொழி மரபிலே பெரிதும் பேணப்பட்டு வந்தன. எனினும் இக்கலை பற்றிய கருத்துக்களின் பிரதிபலிப்பினை சமகால கட்டடங்கள் சிற்பங்கள் இலக்கியம் முதலியவற்றிலே காணலாம். ஆனால், துரதிஷ்டவசமாக இலங்கையின் கரையோரப் பிரதேசங்களிலே கி.பி 16ம், 17ம் நூற்றாண்டுகளில் ஏற்பட்ட போர்த்துகீசரின் ஆதிக்கம் அவர்களின் சுதேசக்கலை ஒழிப்புக் கொள்கை முதலியவற்றால் இப்பகுதிகளில் இருந்த கட்டடம், சிற்பம்,

ஒவியம், போன்றவை பெரிதும் அழிந்து ஒழிந்து விட்டன. எனினும் இவர்களின் ஆதிக்கம் அதிகம் இடம் பெறாத சில இடங்களிலே சில நடன சிற்பங்கள் கிடைத்துள்ளன. எனினும் சில (கல், உலோக, மர, யானைத்தந்த) சிற்பங்கள் சமகால சிங்கள தமிழ் நூல்கள் குறிப்பாக சில வேற்று நாட்டவர் மொறோக்கோ நாட்டுப் பயணியான இப்பின் பத்தாத்தா போன்றோரின் பிரயாண குறிப்புகள் போன்றவை குறிப்பிடற்பாலன [5]. மேலும் குறிப்பிட்ட காலத்துக்கு முந்திய, பிந்திய கால நடனம் பற்றி குறிப்பிடும் வரலாற்று மூலங்களும், சமகாலத்தில் தென்னிந்திய நடன வரலாறு பற்றிய மூலகங்களும், கருத்துக்களும் ஒப்பீட்டு ரீதியில் குறிப்பிடற்பாலன.

இக்காலப்பகுதியிலே நிலவிய சாஸ்திரிய நடனம் சமகால தமிழகத்திலே பொதுவாக தேவரடியார் ஆடிய நடனம் எனக் கொள்ளப்படுகின்றது. மேலும் இசை, நடனம் ஆகிய கலைகளுக்கும் புத்த சமய வைபவங்கள் குறிப்பாக தந்ததாது வணக்கத்திற்கும் இடையில் நெருங்கிய தொடர்புகள் காலப்போக்கில் ஏற்பட்டன. புராதன இலங்கையில் வாழ்ந்துவந்த தமிழர்களை பொறுத்த மட்டில் அவர்கள் மத்தியிலே சமகால தமிழகத்தை போன்று நடனங்கள் நிலவின எனலாம். குறிப்பாக சிலப்பதிகாரம், பல்லவர் ஆட்சிகாலம் தொடக்கம் தமிழக சாஸ்திய நடனமாகிய பரத நாட்டியம் தமிழகத்திலே நிலவி வந்தது. தொடர்ந்து சோழப்பெருமன்னர் விஜய நகர பேரரசுநாயக்கர் காலங்களிலும் இந்நடனம் மென்மேலும் வளர்ந்து சிறப்புற்றது. சிலப்பதிகார உரையாசிரியரான அடியார்க்கு நல்லார் கூறும் சிங்களம் என்னும் நடனம் எது என்பது தெரியவில்லை இவ்வுரையாசிரியரான அடியார்க்கு நல்லார். கி.பி. 15ம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். இக்காலக்கட்டத்திலே கண்டிய நடனம் உருவாகி விட்டது எனவே அதுவே அவர் கூறி இருக்கும் நடனம் என எம். டி. ராகவன் குறிப்பிட்டுள்ளார் [1]. நடனம் எதுவாகினும் சமகால தமிழகத்தில் இந்நடனம் பற்றி அறிஞர் அறிந்திருந்தனர் என்பதும் தமிழக-இலங்கை கலைத்தொடர்புகள் நிலவியதையும் இதன் மூலம் அறியக் கூடியதாகவுள்ளது.

## II. ஆடல் வடிவம்

வடபுலத்திலே விளங்கிய யாழ்ப்பாண அரசிலே சமகால தமிழகத்தை போன்று பரத நாட்டியமும் நாட்டுக்கூத்துக்களும் தொடர்ந்து நிலவியது எனலாம். மேற்குறிப்பிட்ட காலப்பகுதிகளிலே சிங்கள அரசுகளிலே நிலவிய நடனம் பற்றிய சில முக்கியமான தகவல்களை சமகாலத்திலே கல், மரம், உலோகம், யானைத்தந்தம் ஆகியவற்றிலான சில சிற்பங்களும் சிங்கள இலக்கிய நூல்களும் தருகின்றன. இவை போலவே யானைத்தந்தினாலே செய்யப்பட்ட சீப்புக்களிலே காணப்படும் நடன மாதர்களின் உருவங்களும் சிறப்பானவை. கொழும்பு நூதனசாலையிலுள்ள சித்திர தபால் அட்டைகளில் இவர்கள் ''நடன தெய்வம்'' எனக் குறிப்பிட்டுள்ளனர். கேகாலை மாவட்டத்தில் உள்ள ரெடிகமவிலே தூபி ஒன்றின் அகழ்வு ஆராய்ச்சியின் போது கண்டுபிடிக்கப்பட்ட மூன்று சிறிய வெண்கல சிற்பங்களும் நன்கு குறிப்பிடத் தக்கவை. இவை இலங்கை நடன வரலாற்றில் ஒரு புதிய அத்தியாயத்தை தொடக்கியுள்ளன எனவும் எம். டி. ராகவன் குறிப்பிட்டுள்ளார் [1]. இந்நடன மாதர்களின் நடன நிலைகள் பரத நாட்டியத்திற்கான நிலைகளில் காண்படுகின்றன என்றும் குறிப்பாக நடராசா வடிவத்தை பிரதிபலிப்பனவாகவும் கருதப்படுகின்றன. இந்நடனமாதர்களின் ஆடையும் இக்கால பரத நாட்டிய கலைஞரின் ஆடையை ஒத்துக் காணப் படுகின்றது. (பரதநாட்டியத்திற்குரிய ஆடை அமைப்புக்கள் முதன் முதலில் தேவரடியார்களால் அறிமுகப்படுத்தப்பட்டது. அக்காலத்தில் இறைவனுக்கு அலங்கரிக்கப்பட்ட ஆடை அணிகலங்களை அணிந்தே தேவரடியார்கள் நடனம் ஆடியுள்ளார்கள். தற்போது இவ்வாறான ஆடை அணிகலங்களை அணிந்தும் நடனம் ஆடுகிறார்கள். அத்தோடு ருக்மணி அருண்டெலால் அறிமுகப்படுத்தப்பட்ட ''கொஸ்ரிம்'' என்று அழைக்கப்படும் கச்சை உடையும் அணிந்து வருகின்றார்கள்.)

கால முறைப்படி நோக்கினால் மயூர, திஸர சந்தேஸங்கள் 14ம் நூற்றாண்டிலும், தொடர்ந்து 15ம் நூற்றாண்டிலே சிறிராகுலரின் பரவி, சேலலிஹினி சந்தேஸங்கள், கிர, ஹம்ஸ, கோகில சந்தேஸங்களும், 16ம் நூற்றாண்டு ஆகிய வண்ணனின் சவுல் சந்தேஸங்களும் எழுந்துள்ளன. இவை அனைத்தும் பறவைகளின் பெயரைத் தாங்கி நிற்பன. இவையே பலவனின் செய்திகளைத் தெய்வத்திற்கோ, மன்னனுக்கோ கொண்டு செல்கின்றன. நடன நிகழ்ச்சிகள் குறிப்பிட்ட வரையறையில் நடைபெற்றன. அரச சபையிலோ அல்லது தேவாலயத்திலோ நடைபெற்ற நடனத்தை குறிப்பிட்ட பறவை நன்கு கவனிக்கிறது.

அரச சபையிலோ அல்லது தேவாலயத்திலோ நடன நிகழ்ச்சி நடைபெறுவதற்கான ஓர் இடம் அல்லது அரங்கு வகுக்கப்பட்டிருந்தது. அது "ரங்க மண்டலம்" எனவும் மலாந்த மலர்களால் பரப்பட்டன எனவும் மயூர சந்தேஸம் கூறும். இதனை மாலதி மலர்கள் தூவப்பட்டிந்த "ரங்கபிம" என திஸர சந்தேஸமும் ஹம்ஸ சந்தேஸமும் கூறும், சவுல் சந்தேஸ இதனை "ரங்கவஹுசால" எனவும் குறிப்பிடப்பட்டிருந்தது. அரச சபையில் இருந்த நடன அரங்கினை "ரங்க மண்டல" கோகில சந்தேஸம் கூறும் கோவில்களில் இடம்பெற்ற நடனம் பக்தி பூர்வமானதாகும். எடுத்துக்காட்டாக தெவிநுவரவிலுள்ள உபுல்வன் (திருமால்) தெய்வத்தின் முன்பு ஆடப்பட்ட நடனம் இறைவனுக்குரிய மிகுந்த பக்தி பூர்வமானதென மயூர சந்தேஸம் கூறும். சவுல் சந்தேஸம் நடனத்தை இறைவனுக்கான அர்ப்பணமாக வர்ணிக்கின்றது.

இந்நடன நிகழ்ச்சிகளின் முக்கியமான அம்சம் பரதநாட்டிய சாஸ்திரத்துடன் இவற்றிற்குமுள்ள பொருத்தப்பாடாகும் [3]. சந்தேஸ காவியங்கள் இதனை தெளிவாக குறிப்பிடுக்கின்றன. எடுத்துக்காட்டாக பரத சாஸ்திர கலைக்கு ஏற்ப தூய மத்தளத்தை வாசித்துக் கொண்டு கலைஞர்கள் அங்கு சமூகம் அளித்திருந்த அனைவரின் உள்ளங்களையும் எழுச்சியடைய செய்திருந்தனர். பார்வையாளார்கள் இவர்களை விண்ணுலக கலைஞர்களின் கலையுடன் ஒப்பிடுகின்றனர். என ஹம்ஸ சந்தேஸம் கூறும் திஸர சந்தேஸம் பரத முனிவரின் கருத்துகளிற்கேற்ப நடனம் அமைந்திருப்பது பற்றிக் குறிப்பிடுகின்றது. கோகில சந்தேசமும், சவுல் சந்தேஸமும் பரத நாட்டிய சாஸ்திரம் பற்றிய விரிவான தவகல்களைத் தருகின்றன. "நடனக்கலைஞரின் அறிவு ஆழமாகவும் பரந்ததாகவும் இருக்க வேண்டும் இதனை எய்வதற்கு அவர்கள் முயற்சிக்க வேண்டும். இதனை பாடல்கள், ஆடல்கள், இசை, ஆகியன பற்றி பரதனின் கோட்பாடுகள் அனைத்தையும் தவறின்றிக்கற்ற பின்பே ஆடற்கலைஞர் தயங்காமல் ஆடுகின்றனர்" என கோல சந்தேஸம் கூறும். இத்தகைய வருணனைகளை நன்கு விரிவாகப் பகுப்பாய்வு செய்து பார்க்கும் போது இந்நடனங்கள் தென் இந்தியாவிலுள்ள மரபு வழிப் பரத நாட்டியத்தையே பின்பற்றுகின்றன என்பதில் ஐயமில்லை. ஆங்கீக, வாசிக, ஆஹார்ய, சாத்வீக எனும் நல்வகை அபிநயங்கள், பரத சாஸ்திரம் கூறும் ரசங்கள் பற்றிய குறிப்புகள் இந்நூல்களில் உள்ளன. விபீஷணனின் தேவாலயத்திலே தத்தம் அபிநயங்கள் மூலம் ஆடற் கலைஞர் பார்வையாளரை மகிழ்விக்கின்றனர் என ஹம்ஸ சந்தேஸம் கூறுகின்றது.

சந்தேஸ காவியங்களிலே நடன மாதர் பற்றிய தத்ரூபமான வருணனைகளிலே கண்கள், கண்புருவங்கள், கைகள், கால்கள், முதலியனவற்றின் பொருத்தமான அமைவுகளைப் பற்றிய ஒன்று "தலைகளையும், கண்புருவங்களையும் நீண்ட கண்களையும், கழுத்துகளையும் அசைத்துக் கொண்டு அழகிய இளம் பெண்கள் மகிழ்ச்சியுடன் நடனமாடுவதைப் பாருங்கள்" என பரவி சந்தேசஸத்தில் வந்துள்ளமை கவனித்தற்பாலது.

"நடன மாதர் ஆடும் போது கைகள் எழும் போது, கடைக்கண் பார்வைகளை அவற்றின் மீது எய்கிறார்கள்." என சேலலிஹினி சந்தேஸம் கண் அசைவுகள் பற்றியும் "சிவந்த மெல்லிய தளிர் போன்ற கைகளால் (நடன மாதர்) அபிநயம் செய்கிறார்கள்" என மயூர சந்தேஸம் அபிநயம் பற்றியும் கூறுகின்றன.

சமன் தேவாலயத்திலே மத்தளத்தின் தாளத்திற்கேற்ப முன்னைய நாள் பரத முனிவரைப் பின்பற்றி நடன மாதர் கண்கள், கைகள், கால்களைப் பொருத்தமாக பயன்படுத்தி ஆடுதலை வண்ணர் சவுல் சந்தேஸத்திலே "முற்காலத்திய பரத முனிவரை பின்பற்றி மத்தளத்தின் தாளத்திற்கேற்ப கண்கள், கைகள், கால்களின் அசைவுகளை பொருத்தமாக இணைத்து அழகிய இளம் பெண்கள், பெண்தெய்வங்கள் போல ஆடுகின்றனர்" என வருணித்துள்ளார். நடனத்திற்கு வாய்ப்பாட்டிசையும், வாத்தியமும் அவசியமே. இவை பற்றியும் இந் நூல்களிலே பொருத்தமாகக் கூறப்படுள்ளது.

இலங்கையின் சுதேச இசை நடனக்கலைகளின் தொடக்கம் பற்றி பேராசிரியர் இ. ஆர் சரச்சந்திரா "இலங்கையின் இசை நடனக்கலைகளினை பொறுத்தளவில் இக்கலைகள் நன்கு வளர்ச்சி பெற்ற தென்னிந்திய கலைகளுடன் தொடர்புற்ற போது சமய ஆதரவினை பெற்றன. உயர் வர்க்கத்தினரின் ஆதரவினை பெற்றன. நன்கு வளர்ச்சி பெற்றன. சில இடங்களில் இவ் வளர்ச்சி ஒழுங்கின்றியும் காணப்பட்டன. இன்று கிடைத்துள்ள சான்றுகளின்படி சுதேச இசை மரபு கண்டி மன்னர் காலத்திலேயேதான் ஏற்பட்டது எனக் குறிப்பிட்டுள்ளார் [6]. இக்காலக்கட்டத்திலேயே தான் கண்டி

நடனம் உருவாயிற்று இதற்கும் பரத நாட்டியத்திற்கும் கதக்களிக்கும் இடையில் சில ஒற்றுமைகள் உள்ளன. இவையாவும் பரத சாஸ்திரத்தை பின்பற்றுதலும் இதற்கான காரணிகளில் ஒன்றாகும்.

இப்பிரதேசத்தில் நிலவிய நடனம் பற்றி தமிழிலுள்ள சமகால நூல்கள் சிலவற்றிலிருந்து சில தகவல்களை பெறக்கூடியதாக உள்ளன. இந்த வகையிலே வைபவபாடல், கைலாய மாலை, கண்ணகி வழக்குரை காவியம், தக்ஷிணகைலாச புராணம், கோணேசர் கல்வெட்டு, திருக்கரசைப்புராணம், திருச்செல்வர் காவியம் முதலியன குறிப்பிடற்பாலன. இவையாவும் கி.பி. 14-18ம் நூற்றாண்டு வரையுள்ள காலப்பகுதியைச் சேர்ந்நதவை. சமகால சிங்கள நூல்களிலே காணப்படும் நடனக் காட்சிகள் கருத்துக்களை இவற்றில் ஓரளவே காணலாம்.

மேற்குறிப்பிட்ட சிங்கள நூல்கள் சிலவற்றில் போல இவற்றுட் சிலவற்றில் இருந்து நடன சாஸ்திர மூலநூலான பரத நாட்டிய சாஸ்திரம் (பரதம்) பற்றிய குறிப்புக்கள்.

‘‘நடிக்கும் பரதமியலிசை நாடகம்’’ என தக்ஷிணகைலாசப்புராணம் சிறப்பு பாயிரத்திலும், ‘‘ஆடகக்சிலம் பொலியரவக் கிண்கிணி பாடகச் சீறடி பரதப்பண்ணுற’’ எனத் திருச்செல்வர் காவியத்தில் உள்ள நாட்டுப்படலத்திலும், ‘‘பார்தனிலியலிசை நாடகம் பரதமோடியலிசை யாடினும்’’ எனவும்.

‘‘பாரநெறியாளன்’’ எனவும், கண்ணகி வழக்குரை காவியத்திலே (மாதவி அரங்கேற்றுக்கதை) கூறப்பட்டுள்ளனமையும் ஒப்பீட்டு ரீதியிலும் நோக்கத்தக்கவை [2]. பரதரின் நாட்டிய சாஸ்திரம் பரத நடனத்தின் அடிப்படை மூலநூலாக விளங்குவதால், பரதம் பற்றிய குறிப்புக்கள் வருதல் இயல்பே. பரதம் எனும் சொல், நடனம், நாடகம், நடிகன் ஆடுவோன் என பல பொருட்படும்.

இக்கட்டுரையிற் குறிப்பிட்ட காலப்பகுதிலேயே நிலவிய சாஸ்திரிய நடன மரபு பற்றியே இங்கு இது வரை கூறப்பட்டுள்ளது. எனினும் தமிழர் மத்தியில் நிலவிய கிராமிய நடனங்கள் பற்றி சிறிது கூறப்படும். நாட்டார் கலைகளில் குறிப்பாக வடமோடி, தென்மோடிக் கூத்துக்கள் நிலவியிருக்கலாம் என கதிரைமலைப் பள்ளு எனும் நூலில் குறிப்பிடப்பட்டிருப்பதை சுட்டிக்காட்டலாம். இவை பெரும்பாலும் எழுதப்படாது வாய் மொழி மரபிலே பேணப்பட்டு வந்தவையாகும். எனினும் இக்காலத்தில் எழுந்த கும்மி, குறவஞ்சி, சிந்து, பள்ளு முதலிய பிரபந்த வகைகளில் நாட்டார் இசை, கூத்து (நடனம்) பற்றிய குறிப்புகள் ஆங்காங்கே விரவிக் காணப்படுகின்றன.

## III. தொகுப்புரை

இலங்கையில் நிலவிய நாட்டிய சாஸ்திர ஆடல் மரபு பற்றி இதுவரை சுருக்கமாக எடுத்துக் கூறப்பட்டுள்ளது. இக்காலச் சிங்கள மன்னர்களும், உயர் வர்க்கத்தினரும் சமகால தமிழ் மன்னர்கள், உயர்வர்க்கத்தினர் போலவே பரதரின் நாட்டிய சாஸ்திரத்தைப் பின்பற்றி வந்த சாஸ்திரிய நடனத்தைப் பெருமளவு போற்றி வந்துள்ளனர். இலங்கையைப் பொறுத்த மட்டில் கி.பி 13ம் நூற்றாண்டிற்கு முன்பே பல்லவர், குறிப்பாகச் சோழப்பெருமன்னர் (10ம் நூற்றாண்டு) ஆதிக்க காலம் தொடக்கமாவது தமிழகத்திலே தேவரடியார் ஆடிய நடனம் இங்கு நன்கு அறிமுகம் செய்யப்பட்டு, சோழருக்குப்பின் இலங்கையில் கி. பி. 11ம் நூற்றாண்டு இறுதிக்காலப்பகுதி தொடக்கம் 16ம் நூற்றாண்டு வரை ஆட்சி செய்த சிங்கள மன்னர்களும், இலங்கையில் வட பகுதியில் கி.பி. 13ம் நூற்றாண்டு தொடக்கம் 1619 வரை ஆட்சி செய்த தமிழ் மன்னர்களும் ஏறக்குறைய ஓரே விதமான சாஸ்திரிய நடனத்தையே ஆதரித்து வந்துள்ளனர் என்பதும் இக்கட்டுரையிலே சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. இக்காலத்திய நடனம் பற்றி ஆராய்ந்த பேராசியர் இ. ஆர் சரச்சந்திர இக்கால சிங்கள அரசுகளில் நிலவிய சாஸ்திரிய நடனம் நாட்டிய சாஸ்திரத்தை அடிப்படையாகக் கொண்டதும் தமிழகத்திலே நிலவி வந்துள்ளதுமான பரதநாட்டியமே என்று கருத்துப்படத் தெளிவாகக் கூறியுள்ளார். டபிள்யூ. பி முகுல்லோலுவவும் இதே கருத்தினை தமது ‘‘இலங்கை நடனங்கள்’’ என்னும் நூலிலே குறிப்பிட்டுள்ளார். மேலும் குறிப்பிட்ட காலப்பகுதியிலே தமிழகத்தில் ஏற்றபட்ட முஸ்லிம் படையெடுப்புகள் போன்றவற்றினால் மக்களில் ஒரு சாரார் இலங்கைக்கு புலம் பெயர்ந்தனர். அவர்களில் கலைஞரும் இருந்தனர். ஆனால் கி.பி. 16ம் நூற்றாண்டின் பிற்பகுதியிலே இலங்கையின் கரையோரப் பிரதேசங்களிலேற்பட்ட போர்த்துக்கீசர் ஆதிக்கத்தினாலும், மலைநாட்டிலே கண்டிய நடனம் உருவாகியதாலும் ஏற்கனவே சில நூற்றாண்டுகளாக நிலவிய இந்நடனத்திலே இந்து சமயப்பண்புகள் இருந்தமையாலும் இந்நடனம் மங்கிற்று என்று கருதப்படுகிறது. கண்டிய

நடனத்தில் இந்து சமய அம்சங்கள் சில உள்ளன. எவ்வாறாயினும் இலங்கை முழுவதிலும் ஒரு காலக்கட்டத்திலே சமய மொழி வேறுபாடுகளைக் கடந்து பரதரின் நாட்டிய சாஸ்திரத்தை அடிப்படையாகக் கொண்ட ஆடல் மரபு நிலவி வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இவ்விடயம் மிக விரிவாக ஆராயப்பட வேண்டியதொன்றாகும்.

## உசாத்துணைகள்


[1]. Ragavan, M.D., Sinhala Natum, Published by M.D. Gunasena, Colombo, 1967.
[2]. சாமிநாதையர் உ.வே., சிலப்பதிகாரமூலமும் அடியார்க்குநல்லாருரையும், அச்சாக்கம்: சுதர்சன் கிராபிக்ஸ், 2001.
[3]. சிவசாமி, வி., இலங்கையில் நிலவிய இந்து நடன மரபுகள். (கிபி 1300-1800), “பத்மம்”, (பேராசிரியர் பத்மநாதன் பாராட்டுமலர்).
[4]. சிவசாமி வி., பரதக்கலை, அச்சாக்கம்: பைன் கிராபிக்ஸ், யாழ்ப்பாணம், 2005.
[5]. சுந்தரம்பிள்ளை செ., இந்து நாகரிகத்திற் கலை, அச்சாக்கம்: குமரன் புத்தக இல்லம், சென்னை, 2001.
[6]. Sarachchandra, E.R., The Folk Drama of Ceylon, Published by Dept. of Cultural Affairs (Colombo), 1966.